Electrification of railway lines

*9. Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state.

(a) whether this Government have received any communication from the Centre on the scheme of electrification of railway lines in this State; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) மத்திய அரசிடமிருந்து நேரடியாகத் தகவலேதும் வரவில்லை. எனினும், மின்சார ரயில் விடும் திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னை—கும்மிடிப்பூண்டி—கூடூர், சென்னை—திருவள்ளூர் இரயில் பாதைகளை மின்சார இரயில் பாதைகளாக மாற்றும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதென்று தென் பிராந்திய இரயில்வே துறையினர் தெரிவித்துள்ளனர். மின்சார இரயில் விடுவதற்கு தோராயமாக நிச்சயிக்கப்பட்ட கால அளவு 1977 டிசம்பர் திங்களாகும்.

[முற்பகல் 10.30]

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, சமீபத்தில் மத்திய சர்க்கார் அந்த இரண்டு திட்டங்களையும் கைவிட்டு விட்டதாக சொல்லப்படுகிறது. அந்தப் பணிகளை நம்முடைய சர்க்கார் மூலமாக, குறிப்பாக இந்த சென்னை—திருவள்ளூர் பாதையை மின் இணைப்பு செய்வதற்கு மத்திய அரசை வற்புறுத்துவதற்கு நம் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் பத்திரிக்கையில் வந்த செய்தியைச் சொல்கிறார்கள். நானும் அதைப் பத்திரிக்கையில் படித்தேன். இன்னும் அரசுக்கு அது குறித்து எந்தவிதமான தகவலும் வரவில்லை. இப்போது அரசிடத்தில் இருக்கும் தகவலைத்தான் தந்தேன். அப்படியிருக்குமானால், மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

திரு. ஆ. பாந்தாமன்: தலைவரவர்களே, சென்னை-அரக்கோணம் மின்சார ரயில் திட்டம் 1973-74-லேயே விரைவுபடுத்துவதாக மத்திய அரசு கூறி வந்தது. இப்போது இருக்கும் சூழ்நிலையில் அது தாமதப்படுத்தப்படுவதாகத் தெரிகிறது. அதை விரைவு படுத்த நம்முடைய அரசு முன்வருமா?

1974 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மத்திய அரசை விரைவுபடுத்தச் சொல்லி நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. எஸ். குமாரசாமி : தலைவரவர்களே, நமக்கு மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதால், இப்படிப்பட்ட மின்சார ரயில் விடுவதைத் தவிர்த்து, டீசல் இன்ஜின் அல்லது நீராவி இன்ஜின் மூலம் அப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதற்கு தமிழக அரசு மத்திய அரசுக்கு ஆலோசனை கூறுமா? எதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கு ஆலோசனை கூறுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மின்சார ரயில் விடுவதற்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு மின்சார உற்பத்தியைக் கணக்கில் எடுத்துக் கொண்டு தான் ஒப்புதல் அளித்து இருக்கிறோம்.

கிழக்குக் கடற்கரைச் சாலை

*10 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிழக்குக் கடற்கரைச் சாலையில் புதிய பாலங்கள் எங்கெங்கு கட்டப்படவிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விவர அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, விவர அறிக்கையில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் 40 இடங்களில் பாலங்கள் கட்டப்படவிருக்கின்றன என்ற விவரம் இருக்கிறது. சென்னையிலிருந்து தஞ்சை மாவட்டத்திற்குச் செல்கிற வழியில் சிதம்பரத்திற்கு அருகில் வெள்ளாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்ற வேண்டுகோளை ஏற்று, அது கட்டப்பட விருப்பதாகவும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 75 லட்சம் இந்த கிழக்குக் கடற்கரைச் சாலை மதிப்பீட்டில் சேர்த்து இருப்பதாகவும் செய்தி வந்தது. ஆனால் இப்போதுள்ள நிலையில் அது சேர்க்கப்படவில்லை . என்பதை நினைவுபடுத்தி, அதற்கு

@ 106-116-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.